# ஜல் ஜீவன் திட்டத்தில் தமிழகம் முதலிடம்

## அமைச்சர் கே.என்.நேரு

**பட்டுக்கோட்டை, ஜூன் 17:** அனைவருக்கும் குடிநீர் வழங்கும் ஜல் ஜீவன் திட்டத்தில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடத்தில் உள்ளது என நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு சனிக்கிழமை தெரிவித்தார்.

தஞ்சாவூர்மாவட்டம்,பட்டுக்கோட்டை நரியம்பாளையம் பகுதியில் புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா சனிக்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமை வகித்து, அடிக்கல் நாட்டி பேசியதாவது:

தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயமே பிரதான தொழிலாக உள்ளது. ஆகவேதான், வேளாண் துறைக்கு என்னத் தேவை என்பதை உணர்ந்து முதல்வர் மு.க. ஸ்டாலின் செயல்படுத்தி வருகிறார்.



பட்டுக்கோட்டை நரியம்பாளையம் பகுதியில் சனிக்கிழமை புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கான அடிக்கல்நாட்டு விழாவில் பங்கேற்று மலர்தூவிய அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மக்களவை உறுப்பினர் எஸ்.எஸ். பழநிமாணிக்கம், மாவட்ட ஆட்சியர் தீபக் ஜேக்கப் உள்ளிட்டோர்.

கடந்த சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் பட்டுக்கோட்டையில் புதிய பேருந்து நிலையம், மார்க்கெட் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது.

இதில் ரூ.3.5 கோடியில் மார்க்கெட் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

போக்குவரத்து வசதி இருந்தால் தான் விளைப் பொருள்களை மற்ற இடங்களுக்கு கொண்டுச் செல்ல முடியும்.

அதற்காக பேருந்துநிலையம் உள்ளிட்ட வசதிகளும் செய்து கொடுக்கப்படும். அனைத்து பேரூராட்சிகளிலும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம்.

1 லட்சம் மக்கள் தொகை கொண்ட நகரத்தில்தான் புதை சாக்கடை திட்டம் கொண்டுவரப்படும்.

ஆனால், 80 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட பட்டுக்கோட்டையில் முதல்வரிடத்தில் தெரிவித்து விதியில் தளர்வு செய்து அடுத்தாண்டு புதைசாக்கடை திட்டம் கொண்டுவரப்படும்.

அனைவருக்கும் குடிநீர் வழங்கும் திட்டமான ஜல் ஜீவன் திட்டத்தில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.

எனவே பாதுகாக்கப்பட்ட குடிநீர் எல்லோருக்கும் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார் அவர்.

விழாவில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தஞ்சாவூர் மக்களவை உறுப்பினர் எஸ் .எஸ். பழநிமாணிக்கம், சட்டப்பேரவை உறுப்பினர்கள் அண்ணாதுரை (பட்டுக்கோட்டை), அசோக்குமார் (பேராவூரணி), துரை.சந்திரசேகரன் (திருவையாறு), மாவட்ட ஆட்சியர் தீபக் ஜேக்கப், கூடுதல் மாவட்ட ஆட்சியர் சுகபுத்ரா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# சர்வதேச நிகழ்வுகளில் மதுபானம் பரிமாற உரிமம்: அரசாணையில் தவறில்லை

## தமிழக அரசு

**சென்னை, ஜூன் 17:** சர்வதேச கருத்தரங்குகள், விளையாட்டு நிகழ்வுகளில் மதுபானங்கள் பரிமாற உரிமம் வழங்க வகை செய்யும் சட்ட திருத்த அரசாணையில் சட்டவிரோதம் இல்லை என தமிழக அரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்தது.

வணிகவளாகங்கள்,விளையாட்டு மைதானங்களில் மதுபானங்கள் பரிமாற வசதியாக தமிழ்நாடு மதுபான சட்ட விதிகளில் திருத்தம் செய்து, தமிழக அரசு சிறப்பு உரிமத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த அரசாணையை எதிர்த்து வழக்குரைஞர் பாலு, சென்னை உயர்நீதிமன்றத்தில் பொது நல வழக்கை தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், அரசாணைக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது.

இந்த வழக்கில் உள்துறை மற்றும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறைச் செயலாளர் சார்பில் மதுவிலக்கு துறை ஆணையர் ரத்னா பதில்மனு தாக்கல் செய்துள்ளார். அதில், திருமணம் போன்ற நிகழ்வுகளில் மதுபானம் பரிமாற வகை செய்யும் பிரிவுகள் நீக்கப்பட்டு, சர்வதேச கருத்தரங்குகள், விளையாட்டு நிகழ்வுகளில் மட்டும் மதுபானங்கள் பரிமாற உரிமம் வழங்க வகை செய்யும் திருத்த அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மதுபான விற்பனை விதிகளின்படியும்,உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின்படியும் தான் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சர்வதேச கருத்தரங்குகள், விளையாட்டு நிகழ்வுகளில் மதுபானங்கள் பரிமாற ஒரு நாள் அல்லது சில நாள்களுக்கு மட்டும் உரிமம் வழங்கப்படும். கல்வி நிறுவனங்களுக்கு அருகில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு இந்த உரிமம் வழங்கப்படாது என்று பல்வேறு நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இந்த உரிமங்கள் வழங்கப்படும். பொதுமக்களின் நலனை கருத்தில் கொள்ளாமல், வருவாய் ஈட்டுவதையே நோக்கமாக கொண்டு இந்த அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று மனுதாரர் கூறும் குற்றச்சாட்டு தவறானது.

மேலும், மதுவுக்கு எதிராக விழிப்புணர்வு பிரசாரங்கள் மேற்கொள்ள ரூ. 4 கோடியே 50 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனால், அரசின் உத்தரவில் எந்த சட்ட விரோதமும் இல்லை, பொதுநலனுக்கு எதிரானதும் இல்லை என்பதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.வி. கங்காபுர்வாலா மற்றும் நீதிபதி ஆதிகேசவலு அமர்வில் விசாரணைக்கு வந்த போது, அரசின் பதில் மனுவுக்கு பதிலளிக்க அவகாசம் வழங்க வேண்டும் என மனுதாரர் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதை ஏற்று வழக்கின் விசாரணையை ஜூலை 5-ஆம் தேதிக்கு தள்ளி வைத்த நீதிபதிகள், அதுவரை ஏற்கெனவே விதிக்கப்பட்ட தடை உத்தரவை நீட்டித்து உத்தரவிட்டனர்.

EVA STALIN

# 'கழிவுநீர் தொட்டிக்குள் மனிதர்களை இறக்கினால் 5 ஆண்டுகள் சிறை'

**சென்னை, ஜூன் 17:** கழிவுநீர் தொட்டிக்குள் மனிதர்களை இறக்கினால் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று நகராட்சி துறை சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நகராட்சித் துறை நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பது:

மனிதக் கழிவுகளை அகற்றும் தொழில்புரிவோர் தடுப்பு மற்றும் அவர்களது மறுவாழ்வு சட்டம் 2013-இன்படி கழிவுநீர்த் தொட்டியில் எந்தவொரு சூழ்நிலையிலும் இறங்குவது தடை செய்யப்பட்டுள்ளது.

கழிவுநீர்த் தொட்டியை இயந்திரங்களால் மட்டுமே சுத்தம் செய்ய வேண்டும். எந்தவொரு உள்ளாட்சி அமைப்போ அல்லது எந்தவொரு நிறுவனமோ நேரடியாகவோ அல்லது

மறைமுகமாகவோ எந்தவொரு பணியாளரையும் அபாயகரமான கழிவுநீர் கட்டமைப்புகள், கழிவுநீர்த் தொட்டிகளை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபடுத்தக் கூடாது. மீறுவோர் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முதல்முறையாக மீறினால் 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை அல்லது ரூ.2 லட்சம் அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்தும் விதிக்கப்படும். மறுமுறையும் மீறினால் 5 ஆண்டுகள் சிறை தண்டனை அல்லது ரூ.5 லட்சம் அல்லது இரண்டும் சேர்ந்து விதிக்கப்படும்.

கழிவுநீர் கட்டமைப்பு மற்றும் கழிவுநீர் சேகரிப்பு தொட்டியைச் சுத்தம் செய்யும்போது உயிரிழப்பு ஏற்பட்டால், இந்தப் பணியில் ஈடுபடுத்திய உரிமையாளர், ஒப்பந்ததாரர், பணியமர்த்தியவர்கள் மீது மனிதக் கழிவுகளை அகற்றும் தொழில் புரிவோர் தடுப்பு மற்றும் மறுவாழ்வு சட்டம் 2013, இந்திய தண்டனை சட்டம் மற்றும் நடைமுறையில் உள்ள இதர சட்டங்களின்படியும் குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், 2002 ஜூன் 7-இல் வெளியிடப்பட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணையின்படி இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ.15 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# கேள்விக்குறியாகும் இடைநின்ற மாணவர்களின் கல்வி

வெ.முத்துராமன்

**மதுரை, ஜூன் 17:** தேசிய குழந்தைத் தொழிலாளர்கள் திட்டம் முடக்கப்பட்ட நிலையில், தமிழகத்தில் இடைநின்ற 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளின் கல்வி கேள்விக்குறியாகியுள்ளது.

பள்ளிகளில் இடைநின்ற மாணவ, மாணவிகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு சிறப்பு வகுப்புகள் நடத்தி, பின்னர் முறைசார்ந்த கல்வி நிறுவனங்களில் படிப்பைத் தொடர வேண்டும் என்பதற்காக, தேசிய குழந்தைத் தொழிலாளர்கள் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வந்தது.

கடந்த 1986-இல் தமிழகம், பிகார், புதுதில்லி உள்பட 21 மாநிலங்களில் உள்ள 121 மாவட்டங்களில் இந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டது. இதில் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தொகுப்பூதிய அடிப்படையில் ஒரு திட்ட ஒருங்கிணைப்பாளர், அவருக்கு கீழ் வட்டார அளவில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர்.

பள்ளிகளுக்குச் செல்லாமல் வேலைக்கு செல்லும் சிறுவர்களைக் கண்டறிவது இந்த ஆசிரியர்களின் முக்கியப் பணி.

தொடர்ந்து, இவர்களது குடும்பச் சூழலை அறிந்து, இந்தச் சிறுவர்களுக்கு 2 ஆண்டுகள் சிறப்பு வகுப்புகள் மூலம் விளையாட்டு, யோகா போன்றவற்றுடன் கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. பின்னர், இந்தச் சிறுவர்களை முறை சார்ந்த அரசுப் பள்ளிகளில் சேர்த்து படிக்க வைத்தனர்.

மேலும், இந்தச் சிறுவர்கள் தொடர்ந்து பள்ளிக்குச் செல்வதை தேசிய குழந்தைத் தொழிலாளர்கள் திட்டத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள் கண்காணித்தும் வந்தனர்.

மாணவர்கள் மீண்டும் இடைநிற்கும் நிலையில், சம்பந்தப்பட்ட சிறுவர்களை பள்ளிகளில் சேர்த்து வந்தனர். இதன் காரணமாக தமிழகத்தில் 15 மாவட்டங்களில் பள்ளிகளில் இடைநிற்றல் மாணவர்களையும், சிறார் தொழிலாளர்களையும் கண்டறிவது எளிதாக இருந்தது.

**முழுமையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை:** சிறார்களை வேலைக்கு அமர்த்தக் கூடாது என தொழிலாளர் நலத் துறை தொடர்ந்து அறிவித்து வந்தாலும்கூட, செங்கல் சூளை, பட்டாசு ஆலை, நெசவு ஆலை, இரு சக்கர - நான்கு சக்கர வாகனங்கள் பழுது நீக்கும் கடைகள் எனப் பல்வேறு தொழில்களில் சிறார்கள் ஈடுபடுத்தப்படுவதை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை.



**திட்டம் ரத்து:** இந்தச் சூழலில் தேசிய குழந்தைத் தொழிலாளர்கள் திட்டத்தை கடந்த 2021-இல் மத்திய அரசு ரத்து செய்தது. இதற்கான அறிவிப்பு 2022-ஆம் ஆண்டு, மார்ச் மாதம் வெளியிடப்பட்டது. இதனால், இந்தத் திட்டத்தின் கீழ் பணிபுரிந்த திட்ட ஒருங்கிணைப்பாளர், ஆசிரியர்கள் என 750 பேருக்கு 2 ஆண்டுகளாக ஊதியம் வழங்கப்படவில்லை.

**கேள்விக்குறியாகும் கல்வி:** இதனிடையே, இடைநிற்றல் மாணவர்களை அனைவருக்கும் கல்வி இயக்கத்தினர் கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டது. ஆனாலும், இடைநிற்றல் மாணவர்களை மீட்டு பள்ளியில் சேர்ப்பதில்லை என்றும், அவர்கள் தொடர்ந்து பள்ளிகளுக்குச் செல்வது கண்காணிக்கப்படுவதில்லை என்றும் புகார் எழுந்தது. இதன் காரணமாக, தமிழகம் முழுவதும் சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடைநின்ற மாணவ, மாணவிகளின் கல்வி கேள்விக்குறியாகியுள்ளது.

**முனைப்புக் காட்டிய தமிழக அரசு:** இதனிடையே, இடைநிற்கும் சிறுவர்களை மீண்டும் பள்ளிகளில் சேர்க்க தமிழக அரசு முனைப்புக் காட்டியது. சிறார் தொழிலாளர்கள் அதிகரிப்பதைத் தடுக்கவும், கடந்த 2 ஆண்டுகளில் பள்ளிகளுக்குச் செல்லாத சிறுவர்களைக் கண்டறிந்து மீண்டும் பள்ளியில் சேர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. ஆனால், நிதித் துறை ஒப்புதல் கிடைக்காததால் இந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டது.

இதுகுறித்து அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்ட அலுவலர்கள் கூறியதாவது: வட்டார அளவில் எங்களது துறை அலுவலர்கள், பள்ளிகளில் இடைநின்ற மாணவர்களைக் கண்டறிந்து அவர்களை முறை சார்ந்த பள்ளிகளில் மீண்டும் படிக்கச் சேர்த்து விடுகின்றனர். தாய் அல்லது தந்தையை இழந்த சில மாணவர்கள் தொடர்ந்து பள்ளிக்கு வராமல் நின்று விடுகின்றனர். அவர்களின் இருப்பிடம் குறித்துக் கண்டறிவதில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன என்றனர்.

சிறார் தொழிலாளர்கள் திட்ட அலுவலர்கள் கூறியதாவது: தொகுப்பூதியத்தில் பணிபுரிந்தாலும் கூட, பள்ளிகளில் இடைநின்ற மாணவர்கள், சிறார் தொழிலாளர்களைக் கண்டறிவதில் தீவிர கணக்கெடுப்புப் பணியில் ஈடுபட்டு வந்தோம்.

சிறுவர்களைப் பற்றிய விவரங்களை அறிந்து, வேலைக்குச் செல்லும் குழந்தைகளை மீண்டும் பள்ளியில் படிக்க வைக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டோம்.

தேசிய குழந்தைத் தொழிலாளர்கள் திட்டத்தை மத்திய அரசு ரத்து செய்ததால், பள்ளியில் இடைநின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தமிழக அரசு இந்தத் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த முயற்சி மேற்கொண்டபோதிலும், பல்வேறு நிர்வாகக் காரணங்களால் திட்டம் கிடப்பில் போடப்பட்டது.

எதிர்காலத்தில் பள்ளிகளில் இடைநிற்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதைத் தடுக்கவும், சிறார் தொழிலாளர்கள் முறையை ஒழிக்கவும் தமிழக அரசு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

SQUASH WORLD CUP CHENNAI - 13-17 JUNE 2023

# ஸ்குவாஷ் உலக சாம்பியன் எகிப்து




வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசளித்த முதல்வர் மு.க. ஸ்டாலின்.

**சென்னை, ஜூன் 17:** டபிள்யுஎஸ்எஃப், எஸ்ஆர்எஃப்ஐ, எஸ்டிடிஏ சார்பில் சென்னையில் நடைபெற்ற உலகக்கோப்பைஸ்குவாஷ்போட்டியில் மலேசியாவை 2-1 என்ற புள்ளிக் கணக்கில் த்ரில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை தக்க வைத்தது எகிப்து.

உலகக் கோப்பை ஸ்குவாஷ் போட்டி சென்னை எக்ஸ்பிரஸ் அவென்யு மாலில் கடந்த 13-ஆம் தேதி தொடங்கியது. தமிழக விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் போட்டியை தொடங்கி வைத்தார். எகிப்து, இந்தியா, மலேசியா, ஜப்பான், தென்னாப்பிரிக்கா, ஹாங்காங் சீனா, கொலம்பியா, ஆஸ்திரேலிய அணிகள் பங்கேற்றன.

இந்நிலையில் அரையிறுதி ஆட்டங்களில் ஜப்பானை வீழ்த்தி எகிப்தும், இந்தியாவை வீழ்த்தி மலேசியாவும் இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றன.

**முதல் ஆட்டத்தில் அதிர்ச்சி:** இறுதி ஆட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. பலமான எகிப்து அணிக்கு சவால் தரும் வகையில் மலேசிய அணியினர் ஆடினர். தொடக்க ஆட்டத்தில் மலேசியாவின் ஸின் யிங் யீ அபாரமாக ஆடி 7-4, 7-5, 7-6 என்ற நேர் செட்களில் எகிப்தின் கென்ஸி அய்மனை 17 நிமிஷங்களில் வீழ்த்தினார்.

இதனால் எகிப்து அணியினர் அதிர்ச்சி அடைந்தனர். எளிதாக வெல்லலாம் எனக் கருதப்பட்ட நிலையில் முதல் ஆட்டத்தில் தோல்வி அடைந்தனர்.

இரண்டாவது ஆட்டத்தில் மலேசிய வீரர் டேரன் பிரகாசத்தை 7-3, 7-6, 7-4 என நேர் செட்களில் வீழ்த்தி சமன் செய்தார் எகிப்து வீரர் எலி அபௌ எலினென்.

மூன்றாவது ஆட்டத்தில் எகிப்தின் இளம் வீராங்கனை ஃபேரோஸ் அபோல்கைர் 7-4, 7-5, 6-7, 7-6 என கடும் போராட்டத்துக்கு பின் மலேசியாவின் அய்ரா அஸ்மனை வீழ்த்தினார்.

இறுதியில் 2-1 என்ற புள்ளிக் கணக்கில் வென்று உலக சாம்பியன் பட்டத்தை தக்க வைத்துக் கொண்டது எகிப்து.

5-6 ஆவது இடங்களுக்கான ஆட்டத்தில் ஆஸ்திரேலியா 2-1 என கொலம்பியாவையும், 7-8-ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் தென்னாப்பிரிக்கா 2-1 என ஹாங்காங்கையும் வீழ்த்தினர்.

**இந்தியா, ஜப்பான் 3-ஆவது இடம்:** புள்ளிகள் அடிப்படையில் இந்தியாவும், ஜப்பானும் 3-ஆவது இடத்தை பகிர்ந்து கொண்டன.

சாம்பியன் பட்டம் வென்ற எகிப்து அணிக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் கோப்பையை அளித்தார்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், விளையாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலர் அதுல்ய மிஸ்ரா, எஸ்டிஏடி உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, டபிள்யுஎஸ்எஃப் தலைவர் ஸேனா உல்ரிட்ஜ், எஸ்ஆர்எஃப்ஐ தலைவர் எஸ். ராமச்சந்திரன், பொதுச் செயலர் சைரஸ் போன்சா உள்பட பலர் கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற அணிக்கு ரூ.8.2 லட்சம் பரிசளிக்கப்பட்டது.

## 'பன்னாட்டு போட்டிகள் நடத்த விருப்பமான இடம் தமிழகம்'

பன்னாட்டு விளையாட்டுகள் மற்றும் போட்டிகள் நடத்துவதற்கு விருப்பமான இடமாக தமிழகம் உருவெடுத்துள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

வெற்றிபெற்ற அணிகளுக்கு கோப்பைகளை வழங்கி முதல்வர் பேசியது:

தமிழகத்தைத் தேர்ந்தெடுத்து ஸ்குவாஷ் உலகக் கோப்பையை நடத்திய அனைவருக்கும் நன்றி. விளையாட்டு வீரர்களிடையே கவனத்தை ஈர்க்கக்கூடிய மாநிலமாக தமிழகம் அமைய இது காரணமாக அமையும்.

செஸ் ஒலிம்பியாட் போட்டியை வெற்றிகரமாக முடித்த பிறகு, பன்னாட்டு விளையாட்டுகள் மற்றும் போட்டிகளுக்கான விருப்பமான இடமாக தமிழகம் உருவெடுத்துள்ளது. ஆகஸ்ட் மாதத்தில் சென்னையில் ஆசிய ஹாக்கி சாம்பியன்ஷிப்பையும், மாமல்லபுரத்தில் உலக சர்ஃபிங் லீக்கையும் நம் மாநிலம் நடத்த உள்ளது.

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி 2023 தமிழகத்தில் நடைபெற உள்ளது என்றார் அவர்.

# கேள்விக்குறியாகும் இந்திய ஏலக்காய் தரம்

கோ.ராஜன்

**தேனி, ஜூன் 17:** கலப்படம், செயற்கை நிறமூட்டிய ஏலக்காய்கள் விற்பனைக்கு வருவதால், உள்நாடு, ஏற்றுமதி வர்த்தகத்தில் இந்திய ஏலக்காயின் தரம் கேள்விக் குறியாகி உள்ளது.

இந்தியாவில் அதிகளவில் கேரள மாநிலம், இடுக்கி மாவட்டத்தில் 1.25 லட்சம் ஏக்கர் பரப்பளவில் ஏலக்காய் விவசாயம் நடைபெறுகிறது. இங்கு விளையும் ஏலக்காய் நறுமணப் பொருள் வாரியம் சார்பில் இடுக்கி மாவட்டம், புத்தடி, தேனி மாவட்டம், போடி ஆகிய இடங்களில் தனியார் ஏல வர்த்தக நிறுவனங்கள் மூலம் மின்னணு ஏல முறையிலும், இணைய வழி வர்த்தக நிறுவனங்கள் மூலமும் விற்பனை செய்யப்படுகிறது.

இடுக்கி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் இந்திய பச்சை ஏலக்காய்க்கு உலக அளவில் சிறந்த விற்பனை வாய்ப்பு உள்ளது. இங்கிருந்து அமெரிக்கா, கனடா, வங்கதேசம், அரபு நாடுகளுக்கு ஏற்றுதியாகிறது.

**இறக்குமதி ஏலக்காய்களில் கலப்படம்:** நறுமணப் பொருள் வர்த்தகத்தில் இந்திய ஏலக்காய் உலகளவில் சிறப்பிடம் பெற்றுள்ள நிலையில், அமெரிக்காவின் கௌதமாலாவிலிருந்து இந்தியாவுக்கு ஏலக்காய் இறக்குமதி செய்யப்படுகிறது. எண்ணெய் தயாரிப்பு உள்ளிட்ட காரணங்களுக்காக ஏலக்காய் இறக்குமதிக்கு அரசு அனுமதி வழங்கியது. ஆனால், எண்ணெய் தயாரிப்புக்கான தன்மை குறைவாக உள்ள இந்த ஏலக்காய்கள், கலப்பட விற்பனைக்காகவே அதிகளவில் இறக்குமதி செய்யப்படுகின்றன. இவ்வாறு இறக்குமதி செய்த ஏலக்காய்களை இந்திய ஏலக்காய்களுடன் கலப்படம் செய்து விற்பனை செய்கின்றனர்.



இதனால், மின்னணு ஏல வர்த்தகம், இணைய வழி மூலம் விற்பனையாகும் ஏலக்காய்களின் தரம் குறைந்துள்ளது. ஏற்கெனவே இடுக்கி மாவட்டத்தில் ஏலக்காய் சாகுபடிக்கு அதிகளவில் பூச்சிக் கொல்லி மருந்து பயன்படுத்துவதால் ஏற்றுமதி வாய்ப்பில் சிக்கல் ஏற்பட்ட நிலையில், கலப்பட ஏலக்காய்களால் இந்திய ஏலக்காய்க்கு ஏற்றுமதி வாய்ப்பு குறைந்து வருகிறது.

**செயற்கை நிறமூட்டல்:** இந்த நிலையில், தற்போது செயற்கையாக நிறமூட்டிய ஏலக்காய்கள் விற்பனைக்கு வருவதால், உள்நாடு மட்டுமல்லாது, ஏற்றுமதி வர்த்தகத்திலும் இந்திய ஏலக்காய்களின் தரம் கேள்விக்குறியாகியுள்ளது. நறுமணப் பொருள் வாரியத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் தனியார் ஏல நிறுவனங்களில் விற்பனைக்கு பதிவு செய்யும் செயற்கை நிறமூட்டிய ஏலக்காய்கள், தரக்கட்டுப்பாடு பரிசோதனையின் போது நிராகரிக்கப்படுகின்றன. ஆனால், இணைய வழி வர்த்தகத்திலும், நேரடி விற்பனையிலும் ஏலக்காய் தரக் கட்டுப்பாடு பரிசோதனை மேற்கொள்ளப்படுவதில்லை.

**நறுமணப் பொருள் வாரியம் பாராமுகம்:** இடுக்கி மாவட்டத்தில் ஏலக்காய் சாகுபடி, வர்த்தகம் பெருமளவில் நடைபெற்று வரும் நிலையில், அவற்றை தரக் கட்டுப்பாடு பரிசோதனை செய்ய நறுமணப் பொருள் வாரியமும் கேரள அரசும் ஆர்வம் காட்டுவதில்லை. குறிப்பாக, அங்குள்ள தனியார் ஏலக்காய் பதப்படுத்தும் நிலையங்களை மாவட்ட உணவு கலப்படம், தரக் கட்டுப்பாட்டு துறை கண்காணிப்பதில்லை. போதிய உள்கட்டமைப்பு வசதிகள், அதிகாரிகள் இல்லாததால் நறுமணப் பொருள் வாரியம் ஏலக்காய் விவசாயம், வர்த்தகம் மீதான தரக்கட்டுப்பாட்டில் கவனம் செலுத்தவில்லை.

**விவசாயிகளுக்கு பாதிப்பு:** ஏலக்காய் விவசாயத்தில் உற்பத்திச் செலவு அதிகரித்து வரும் நிலையில், ஏற்றுமதி வாய்ப்புக் குறைவால் விற்பனை விலை குறைந்து, விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏலக்காய் வர்த்தகத்தை முறைப்படுத்துவதற்கு விவசாயிகள், ஏல நிறுவனங்கள், வர்த்தகர் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு தொடங்கப்பட்டுள்ளது. இந்த பிரச்னை குறித்து இடுக்கி மாவட்டம், வண்டன்மேடுவில் ஞாயிற்றுக்கிழமை ஒருங்கிணைப்புக் குழுவின் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

இது குறித்து நறுமணப் பொருள் வாரிய முன்னாள் உறுப்பினர் ஏ.கே.எம். செந்தில்குமார் கூறியதாவது:

ஏலக்காய் விவசாயத்தை மேம்படுத்தவும், வர்த்கத்தை முறைப்படுத்தவும் நறுமணப் பொருள் வாரியமும், கேரள அரசும் ஆர்வம் காட்டவில்லை. கௌதமாலாவிலிருந்து ஏலக்காய் இறக்குமதி செய்ய மத்திய அரசு கட்டுப்பாடு விதிக்க வேண்டும். கலப்படம், செயற்கை நிறமூட்டிய ஏலக்காய் விற்பனையை நறுமணப் பொருள் வாரியம் தடை செய்து, வர்த்தகத்தை முறைப்படுத்தி ஏற்றுமதி வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும் என்றார் அவர்.